

Vol.22 | No. 12 | December 2018

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## 22ND DIOCESAN DAY 11.11.2018







Alphonsa School Day - 28.11.2018



Arputhar Garments - Vayalinkarai Anniversary
21.11.2018



Thuckalay Nidhi Limited- Blessing
20.11.2018

The Official Organ of the Diocese of Thuckalay
Volume 22 No :12 December 2018

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| ஆயர் சுற்றுமடல் | 06 |
| சீனாய் தியான இல்லம் | 07 |
| மறைக்கல்வி | 08 |
| இளையோர் இயக்கம் | 09 |
| இல்வாழ்வு இயக்கம் | 13 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 14 |
| சமூக சேவை சங்கம் | 15 |
| கல்வி நிறுவனம் | 19 |
| Home away Home | 24 |
| Birthdays & Feastdays | 25 |
| மறைவட்டச் செய்திகள் | 26 |
| Bishop's Engagements | 27 |


*Editorial Board*

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443261100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250833
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/88/2018 — 30 November 2018

Dears,

On 2 December 2018, we shall enter into the holy season of Advent and subsequently the season of Christmas. It is important that we reflect upon the crucial roles this season ought to play in the lives of our people. The days of Advent and Christmas are moments of grace for every believer. Hence, we need to reflect upon them and teach our people the importance of these seasons in their lives and how to spend fruitfully these holy days.

The liturgical season of Advent marks the time of spiritual preparation by the faithful before Christmas. As you are aware, Advent begins on the Sunday closest to the Feast of St Andrew the Apostle (30 November). It spans four Sundays and four weeks of preparation, although the last week of Advent is usually truncated because of when Christmas falls.

The celebration of Advent has evolved in the spiritual life of the Church. The historical origins of Advent are hard to determine with great precision. In its earliest form, beginning in France, Advent was a period of preparation for the Feast of the Epiphany, a day when converts were baptized; so the Advent preparation was very similar to Great Lent with an emphasis on prayer and fasting which lasted three weeks and later was expanded to 40 days. In 380, the local Council of Saragossa, Spain, established a three-week fast before Epiphany. Inspired by the Lenten regulations, the local Council of Macon, France, in 581 designated that from 11 November (Feast of St Martin of Tours) until Christmas fasting would be required on Monday, Wednesday, and Friday. Eventually, similar practices spread to England. In Rome, the Advent preparation did not appear until the sixth century, and was viewed as a preparation for Christmas with less of a penitential bent.

The Church gradually formalized the celebration of Advent. The Gelasian Sacramentary, traditionally attributed to Pope St Gelasius I (dated 496), was the first to provide Advent liturgies for five Sundays. Later, Pope St Gregory I (dated 604) enhanced these liturgies composing prayers, antiphons (Psalms), readings, and responses. Pope St Gregory VII (dat-

ed 1095) later reduced the number of Sundays in Advent to four. Finally, about the ninth century, the Church designated the first Sunday of Advent as the beginning of the Church year.

The Catechism of the Catholic Church stresses the two-fold meaning of the coming of Christ that we commemorate during this season. When the Church celebrates the liturgy of Advent each year, she makes present the ancient expectancy of the Messiah. In sharing in the long preparation for the Saviour's first coming, the faithful are helped to renew their ardent desire for his second coming.

On one hand, the season of Advent invites the faithful to reflect back and encourages celebrating the anniversary of the Lord's first coming into this world. We ponder the great mystery of the incarnation when our Lord humbled himself, taking on our humanity, and entered our time and space to free us from sin. On the other hand, we recall in the Creed that our Lord will come again to judge the living and the dead and that we must be ready to meet him.

In the Syro-Malabar tradition, the liturgical year begins with the period of Annunciation. The four weeks of preparation for the feast of the Nativity of Jesus constitute this season. Since, our people observe abstinence from 1 to 25 December to prepare for Christmas, this period is called as 25 days Lent. Though we observe it only for 24 days, we call it 25 days Lent, because we count the days from 30 November evening. For this reason, it is called Pethurtha, which means, returning, ceasing etc. Lent is a time to return from worldly pleasures and eating the meat products. A question can be raised on the observance of this Lent. We are preparing for a joyful event, namely, the birth of Jesus. Hence, what is the need for observing Lent for receiving a Good News? We know that the inner meaning of Lent is spiritual preparation for a holy life. For us, it is usual to prepare well to receive important persons to our parishes or to our homes. In this sense, how much more we should prepare in order to receive the King of kings! The best preparation would be to make sacrifices. Moses was with the Lord forty days and forty nights without eating and drinking before receiving the Ten Commandments (Ex 34:28). Elijah, before entering the mountain of God, travelled forty days and forty nights without eating and drinking (1 king 19:8). Jesus himself taught us: "Whoever wants to be my disciples must deny themselves and take up their cross and follow me"

(Mt 16: 24). Therefore, 25 days of Lent, which we observe in preparation for Christmas, is an occasion to prepare our lives to receive the child Jesus.

After the season of advent, we enter into the season of Christmas when we shall celebrate joyously the birth of the Saviour. Christmas, coming as it does upon the winter solstice, is a time of paradoxes. We see the light shining in the darkest season, the fire blazing in the cold of winter, life stirring in the fallow of the year. We participate in the paradoxes of the season when we acknowledge the infant light at the darkest point of the year. We read in the Gospel of John, "The light still shines in the darkness and the darkness has not overcome it" (Jn1: 5). Just as the light of the Sun is secretly rekindled and reborn, so are we given an opportunity for our divine spark to wax and grow in light. Christmas is a feast of the interior light, a rekindling of the spiritual spark within us, even as we see the fire blazing in the cold of winter.

In the Gospel of St Matthew, we read: "Behold, a virgin shall be with child, and shall bring forth a son, and they shall call his name Emmanuel, which means, God with us (1:23)." Let us seize the moment and allow ourselves to feel the presence of this God of ours who prefers to be with us. He comes with the message of forgiveness. He asks to forgive one another so that he can also forgive us our sins. "Forgive us our sins for we ourselves forgive everyone in debt to us" (Lk 11:4). Christmas is a time to feel the fact that we are all brothers and sisters created in the image and likeness of God. People belonging to different religions need to live in peace and mutual understanding. Even among Christians, there are different denominations. But they need to work in tandem to bring the message of forgiveness and peace that the Lord came to give to the people around. The prayer of Jesus at the Last Supper should be uppermost in our minds: "They may all be one, as you, Father, are in me and I you, that they also may be in us" (Jn 17: 21).

Christmas is also a time of sacrifice in that we often participate in the giving of gifts and contributing to charities at this time. The nativity and birth that we celebrate at Christmas Eve is a sacrifice. Jesus sacrifices the glory and light vesture of the celestial aeons in order to take on human form and dwell upon the earth. Writing to the Philippians, St Paul was able to capture it. "Christ Jesus, who, though he was in the form of God, did not regard equality with God, something

to be grasped. Rather he emptied himself, taking the form of a slave, coming in human likeness" (Phi 2:6-7). There is no book, no scripture and no authority outside of one's self that is an authentic source regarding the mystery of incarnation. it is a mystery that can only be witnessed individually in each one's own heart.

Further, Christmas belongs not only to those who call themselves Christians but to the entire world. The lowly animals, birds, plants and trees all participate in this nativity of the divine light at Christmas. An old French legend tells how all the animals were given the gift of speech on Holy Night so that they were granted the ability to give outward expression to their consciousness and recognition of the light. Our compassion for our human brothers and sisters is increased when we realize that the animals and trees are also wondrous beings in even more humble, limited and unrecognizable form than ourselves.

Finally, as we are all very familiar, the baby Jesus was born in a stable used to shelter animals and is laid in a manger- a humble birth for the proclaimed King of kings. We also share that humble existence in this world. We also experience the sacrifice of the glorious light of the aeons and see our light power as a tiny spark of its original flame. The holy birth of Christmas represents the birth of the Christ-Sun within us, an awakening of our consciousness to who we are and the light from whence we came, an awakening from the sleep of forgetfulness.

Christmas is at hand! Let us experience the birth of Christ in our hearts and offer him to our people, who are longing for his presence in their lives.

**CONCLUSION**

We are entering the last month of the year 2018. The year has been very momentous for the Eparchy in many ways. We have achieved much during this year. God has been blessing us with good vocations and sufficient resources to continue our mission work in the extended territories of the Eparchy. Let us raise our minds and hearts to God in gratitude for all the blessings that we have received throughout this year. Let me take this occasion to wish everyone a Christ-filled Christmas and a prosperous New Year!with my prayers and blessings,

Yours in Christ Jesus,

✞George Rajendran SDB
Bishop of Thuckalay

# தமிழ்நாடு கஜா புயல் நிவாரண சுற்று அறிக்கை

இறை ஈசோவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே,

தமிழ்நாட்டில் இம்மாதம் (நவம்பர்) 15, 16 ஆகிய நாட்களில் ஏற்பட்ட கஜா புயலால் பல மாவட்டங்கள் சூறைக்காற்றாலும் பெரும் வெள்ளப்பெருக்காலும் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்இயற்கை சீற்றத்தால் வீடுகளையும், நிலபுலன்களையும், வாழ்வாதாரங்களையும் இழந்த மக்கள் ஏராளம். இவர்கள் தற்பொழுது தங்களது குடிசை வீடுகளையும் வாழ்வாதாரங்களையும் இழந்து உண்ண உணவின்றி, படுக்க வீடுகள் இன்றி தவிக்கின்றனர். அவர்களது கோர நிலையை ஊடகங்கள் வழி நாம் அறிந்த ஒன்றே. குறிப்பாக திண்டுக்கல், சிவகங்கை, பாண்டிச்சேரி, கூடலூர், திருச்சி, தஞ்சாவூர் மறைமாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதிகள் அனைத்தும் சேதமானதாக தமிழ்நாடு ஆயர் பேரவை தலைவர் மேதகு ஆயர் பப்புசாமி அவர்கள் அறிவித்திருக்கிறார். இவ்விடங்களிலுள்ள மக்கள் பல முகாம்களில் தங்க வைக்கபட்டுள்ளனர். ஏழை விவசாயிகளும், குடிசைவாழ் மக்களும் நிறைந்ததே நமது தமிழ்நாடு. இவ்வேளையில் உண்ண உணவு, உடுக்க உடை, தங்க வீடு, உடைமைகள் இன்றி வாடுகின்ற நமது சகோதர சகோதரிகளுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டிய கடமை நமக்கு உண்டு என்பதை நாம் உணர்ந்து கொள்வோம். "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத் 25:40) என்ற இயேசுவின் இறைவார்த்தைகள் நம் காதில் எப்போதும் முழங்கட்டும். நமது சகோதர சகோதரிகளின் பரிதாப நிலையை நாம் உணர்ந்தவர்களாய் உதவி கரம் நீட்ட முன்வருவோம்.

கேரளாவில் வெள்ளப்பெருக்கம் ஏற்பட்ட போது நாம் மனமுவந்து ஏராளமான உதவிகளை மறைமாவட்டம் சார்பாக செய்தோம். இது மறுப்பதற்கு இல்லை. எனவே இவ்வேளையிலும் நமது மாநிலத்தை சார்ந்த மக்களுக்கு உதவி செய்யும் வகையில் பொருளுதவியும், பண உதவியும் செய்ய முன்வர உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கஜா புயலால் பாதிக்கப்பட்ட

மக்களுக்கு எந்த வகையில் உதவி செய்யவேண்டும் என்பதைப்பற்றி பங்குத் தந்தையர்கள் உங்களுக்கு அறிவிப்பார்கள். இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
20.11.2018

✞ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

இந்த சுற்று அறிக்கையை 25.11.2018 ஞாயிறு திருப்பலிக்கு பிறகு அறிவிப்பின் போது வாசிக்கவும்.

---

# சீனாய் தியான இல்லம்

| டிசம்பர் மாதம் நடைபெற இருக்கும் சிறப்பு தியானங்கள் | | |
|---|---|---|
| கண்விழிப்பு ஆராதனை | டிசம்பர் 07<br>வெள்ளிக்கிழமை<br>இரவு 9.00 மணி முதல்<br>காலை 5.00 மணி வரை | வழிநடத்துபவர்<br>சீனாய் தியான குழு<br>&<br>Bro. மைக்கேல் |
| ஜெபமாலை அபிஷேக தியானம் | டிசம்பர் 14<br>வெள்ளிக்கிழமை<br>காலை 9.30 மணி முதல்<br>மதியம் 2.00 மணி வரை | வழிநடத்துபவர்<br>சீனாய் தியான குழு |
| நோய்களிலிருந்து குணமளிக்கும் தியானம் | டிசம்பர் 22<br>சனிக்கிழமை<br>காலை 9.30 மணி முதல்<br>மதியம் 2.00 மணி வரை | வழிநடத்துபவர்<br>சீனாய் தியான குழு |
| பரிந்துரை ஜெபக்குழுவிற்கான வளர்ச்சி தியானம் | டிசம்பர் 29<br>சனிக்கிழமை<br>காலை 9.30 மணி முதல்<br>மதியம் 2.00 மணி வரை | வழிநடத்துபவர்<br>சீனாய் தியான குழு |

அருட்தந்தை மிஜோ செபாஸ்டின்
இயக்குநர்



# CATECHISM மறைக்கல்வி

> ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள். அவர் பெயரை வாழ்த்துங்கள். அவர் தரும் மீட்பை நாள்தோறும் அறி வியுங்கள். (திரு 96 :2)

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்.

**கலைப்போட்டிகள்**

மறைவட்ட ஆசிரியர்களுக்கான விவிலியக் கலைப்போட்டிகள் ஜனவரி 26 சனிக்கிழமை அன்று காலை 9 மணிக்கு மஞ்சாலுமூடு, நித்திரவிளை, படந்தாலுமூடு ஆகிய மறைவட்டங்களுக்கு மதியம் 1 மணிக்கும் ஆசிரியர்களுக்கான விவிலிய வினாடி போட்டிகள் மறைவட்ட அளவிலும் பிற்பகல் 2 மணி முதல் ஆறுகாணி, தக்கலை, பிலாங்காலை, சூசைபுரம் ஆகிய மறைவட்டங்களுக்கும் போட்டிகள் நடைபெறும். மேலும் மறைக்கல்வி மாணவர்களுக்கான இசைக் கருவி போட்டிகள் (தபலை, கீபோடு, வயலின்) ஜனவரி 26 சனிக்கிழமை நடைபெறும்.

**தலைமையாசிரியர் கூடுகையும் கிறிஸ்மஸ் விழாவும்**

டிசம்பர் 15 சனிக்கிழமை அன்று கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் வைத்து காலை 10.30 மணிமுதல் 12.30 மணி வரை மறைவட்ட செயலர்களின் கூடுகையும் பிற்பகல் 2.30 மணி முதல் தலைமையாசிரியர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்களின் கூடுகையும் கிறிஸ்மஸ் விழாவும் நடைபெறும்.

**Teachers Competition**

| Items |
|---|
| 1 . Single Song - 3mts<br>2 . Speech - 3 mts<br>3 . Bible Quiz |

| | |
|---|---|
| Speech | புனிதர்களின் வணக்கம் நம்பிக்கை வாழ்வில் |
| Bible Quiz | 1 . திருவெளிப்பாடு - 90 %<br>2 . திருவிவிலியம் பொதுவானவை - 10% |

அருட்தந்தை சனில் பந்திசிறைக்கல்
இயக்குநர்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

**Youth Fest 2K18**



இளைஞர்களின் கூட்டு முயற்சியை வலுப்படுத்தவும், ஆளுமையை வளர்க்கவும் Youth Fest 2K18 06.11.2018 அன்று சங்கமத்தில் வைத்து மறைமாவட்ட அளவில் கொண்டாடப்பட்டது. இதில் பரிசுபெற்றோர் விவரம்.

| *Name* | *Parish* | *Prize* |
|---|---|---|
| Prove YourSelf | | |
| Jijish | Kazhuvanthittai | I |
| Akil | Karode | II |
| Bibin Binu Thomas | Arukani | III |
| Just A Minute Speech | | |
| Viji | Karode | I |
| V. Aneesh | Muzhucode | II |
| P. Ancy | Paraicode | III |
| A.R. Anisha | Cheenivilai | III |
| Group Song | | |
| Sheenu, Nishi, Jothika, Jiji, Jini, Hylin, Mahalaxshmi, Jaise, Pradeep, Prince, Breslin, Jerin, Anten Jobiar Raj | Nagercoil | I |
| Bavithra Teras, Babitha, Jiju Mol, Adharshna, Sherly, Reshma, Amulya Cyril Raj, Beljin, Ajith Singh, Bibin Jose, Rani, Ashwin, D.B. Ajin Raj | Muzhucode | II |
| D. Akshaya, D. Ashika, J. Ashika, J.H. Aiswarya, Y. Belcy, K. Sharmi, K. Sowmya, C.K. Simja, k. Remya, K. Vijithra, K. Reshma | Kaliyal | III |

| Group Dance | | |
|---|---|---|
| D. Dini Mol, T.B. Athira, T.B. Anusree Raj, R. Ancy Freddy, B.M. Meenu | Vayalinkarai | I |
| M. Shalini, A. Anusha, D.P. Aswini, J. Monika, Mary Remi, R. Ancy, Aberna Christal | Soosaipuram | II |
| J.T. Antin Steffy, R. Nivetha, R. Nithisha, P. Shalini, M. Mernisha, G. Meena | Mankarai | III |
| Mime | | |
| E. Edwitch Roshan, Mary Jenisha, D. Subin Raj, D. Sojan, S. Usha, P.V. Babisha | Kaisalavilai | I |
| D. Belgin Festus, D. Began Festus, K. Manoj, D. Livin Raj, M. Ravichandran, Subin, Libin | Munchirai | II |
| Beljin, V. Aneesh, C.M. Stalin, Ashwin, Samuvel, Bibin Jose, Ajith Singh, Amulya Cyril Raj | Muzhucode | III |
| Best Choreography | | |
| D. Dini Mol, T.B. Athira, T.B. Anusree Raj, Sabin, R.A. Abisha, R. Ancy Freddy, B.M. Meenu, D. Martin, Jaffer | Vayalinkarai | I |
| Reshma, Babitha, Aneesh, Beljin, Samuvel, Jiju Mol, C.M. Stalin, Amulya Cyril Raj | Muzhucode | II |
| C.R. Aswin, V.S. Anjali, C.S. Bency Babu, J. Johnsila, K.L. Dhanya Mol, K. Surjith Kumar, V.S. Ajay, K. Satheesh | Nithiravilai | III |
| Mobile Photography | | |
| Nobil | Malaicode | I |
| D. Prasanth | Vayalinkarai | II |
| Asir Raja | Shenkottai | III |
| Aslin Johny | Pilankalai | IV |
| Abish | Anaiyadi | V |
| D. Belgin Festus | Munchirai | VI |
| I. Arun Xavier | Paraicode | VII |
| Anish | Killiyoor | VIII |

| | | |
|---|---|---|
| Jibin Vargese Joseph | Kaliyal | IX |
| Ajith | Killiyoor | X |
| Special Prizes | | |
| Asir Raj | Shenkottai | |
| Michel | Shenkottai | |
| Sathya Prabha | Shenkottai | |
| Vijila Jancy | Shenkottai | |
| Preena | Shenkottai | |
| Theresa | Shenkottai | |
| Lijila Mary | Shenkottai | |
| Monisha Sebastian | Shenkottai | |
| OVER ALL | | |
| Vayalinkarai | I | |
| Muzhucode | II | |
| Karode | III | |
| Kaisalavilai | IV | |
| Nagercoil | IV | |
| Malaicode | V | |

**SMYM**

09.11.2018 மற்றும் 10.11.2018 அன்று காக்கனாடு புனித தோமையார் அரங்கத்தில் வைத்து நடைபெற்ற SMYM கூடுகையில்



தக்கலை மறைமாவட்டத்திலிருந்து ஜெசின், சுஜித், ஜினோ, வர்சா ஆகியோர் கலந்து கொண்டார்கள். தலைமைத்துவ பயிற்சி அளிக்கப்பட்டது. சீரோ மலபார் சபையின் தலைவர் கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களுடன் உரையும், கலந்துரையாடலும் நடைபெற்றன. இரண்டு நாள் நடைபெற்ற பயிற்சி பயன் உள்ளதாக அமைந்தது.

**நறுமுகிழ் கலைக்குழு**

நறுமுகிழ் கலைக்குழுவானது கிள்ளியூர், காட்டாத்துறை, பாலப்பள்ளம் ஆலயதிருவிழாக்கள் மற்றும் மறைமாவட்ட நிகழ்ச்சிகள், பக்த இயக்க நிகழ்ச்சிகள் என பல கலைநிகழ்ச்சிகள் நடத்துகின்றன. இவை மூலம்

இளையோர்களின் கலை திறைமைகள் வளர்ப்பதற்கும் நல் தலைவர்களாக மாறுவதற்கான முயற்சிகளை நறுமுகிழ் கலைக்குழு தலைவர் பேர்லின் அதன்கோடு மற்றும் ஒருங்கிணைப்பாளர் ரெஜிதா படந்தாலுமூடு ஆகியோரால் சிறப்பாக வழிநடத்தப்படுகிறது.

**DOCAT**

11.11.2018 அன்று 22 ஆவது மறைமாவட்ட தினம் கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் இளையோர் இயக்க செயல் மறைக்கல்வி DOCAT அலகு 1 'கடவுளின் மாபெரும் திட்டம் அன்பு' என்னும் புத்தகத்தை மேதகு ஆயர் அவர்கள் வெளியிட இயக்குநர் தந்தை மற்றும் தலைவர் பெற்றுக் கொண்டார்கள். 21.11.2018 அன்று DOCAT பயிற்சி முகாம் கல்லுவிளையில் வைத்து காலை



9.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை நடைபெற்றது. முகாமை இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமை தாங்கி வகுப்பு நடத்தினார். இப்பயிற்சி முகாமில் 34 இளையோர்கள் கலந்துக் கொண்டார்கள்.

பபிஷா ஜூலிட்|செயலர்

---


## இடமாற்றம் மற்றும் பொறுப்புகள்

ஆயர் அலுவலகச் செயலராக நியமிக்கப்பட்ட அருட்தந்தை ஷாஜன் நெட்டபொங்கு அவர்கள் 12 நவம்பர் அன்று பணியேற்றுக்கொண்டார். அருட்தந்தை அவர்கள் சங்கமத்தில் தங்கியிருப்பார். அருட்தந்தை ஷோஜி புத்தன்புரைக்கல் அவர்கள் அலுவலக செயலர் பணியிலிருந்து நவம்பர் 10 அன்று விடுவிக்கப்பட்டார்.

அணமுகம் லொரேட்டோ மாதா ஆலய பங்குத்தந்தையாக பணியாற்றிய அருட்தந்தை குரியன் கோயிப்புறம் அவர்கள் நவம்பர் 25 அன்று அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு ஆறுகாணி மறைவட்ட ஆலயத்தின் துணைப் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார். அருட்தந்தை டோபின் மற்றும் அருட்தந்தை கொச்சுமோன் ஆகியோருக்கு உதவியாகவும் பணியாற்றுவார்.

அருட்தந்தை டோபின் அவர்கள் கூடுதல் பொறுப்பாக அணமுகம் பங்கின் பங்குத்தந்தையாக பணியாற்றுவார்.

அருட்தந்தை ஜினோய் தோமஸ் அவர்கள் மதுரை திருத்தொண்டுதள பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

**மது அடிமைகள் மறுவாழ்வு மையம்**

கல்லுவிளையில் மது அடிமைகள் மறு வாழ்வு மையம் ஒவ்வொரு வாரமும் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாட்களில் காலை 10 மணி முதல் 1.30 மணி வரை செயல்பட்டு வருகிறது. மது அடிமைக்கு சிகிட்சை பெற்றவர்கள் முன்னேற்றமடைந்துள்ளனர். மனநோய்க்கு அதிக அளவில் நோயாளிகள் சிகிட்சை பெற்று வருகின்றனர். ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகிறது. இம்மையத்தை தொடர்பு கொண்டு ஆலோசனைகளும் சிகிட்சையும் பெறலாம். இயக்குநர் அருட்தந்தை அவர்கள் தலைமையில் இம்மையம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**திருமண தயாரிப்பு பயிற்சி**

திருமண தயாரிப்பு பயிற்சி வகுப்புகள் அக்டோபர் மாதம் 26 அன்று காலை 10 மணி முதல் 28 மாலை 4 மணி வரை நடைபெற்றது. நிறைவு நாள் மதியம் 2 மணி முதல் பயிற்சியாளர்களின் பெற்றோர்களுக்கான வகுப்பும் நடைபெற்றது. இப்பயிற்சியில் 33 இளையோர்கள் பங்கேற்றனர். அடுத்த பயிற்சி டிசம்பர் மாதம் 14 வெள்ளி காலை 10 மணிக்கு ஆரம்பித்து 16 ஞாயிறு மாலை 4 மணி வரை நடைபெறும். பயிற்சிக் கட்டணம் ரூபாய் 750 ஆகும்.

**மாதர் ஜோதிஸ்**

மஞ்சாலுமூடு மறைவட்ட மாதர் ஜோதிஸ் போட்டியானது 25-11-2018 அன்று புனித குழந்தை தெரசா ஆலயத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அஜீஸ் அட்டியில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டிகளில் மறைவட்டத்திற்கு உட்பட்ட ஆறு ஆலயங்களிலிருந்து தாய்மார்கள் கலந்துக் கொண்டார்கள். பேச்சு போட்டி, குழுப்பாடல் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

**தரவரிசை விபரம்**

| | |
|---|---|
| I | மஞ்சாலுமூடு |
| II | முழுக்கோடு |
| III | களியல் |

முதல் இரண்டு பரிசுகள் பெற்ற தாய்மார்கள் 14.12.2018 அன்று கல்லுவிளையில் வைத்து நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

அருட்தந்தை அஜீஷ் அட்டியில்|இயக்குநர்

# அருட்சகோதரர்களிடமிருந்து...




**கவரப்பேட்டை**

சென்னை கவரப் பேட்டையில் பயின்று வரும் அருட்சகோதரர் மகேஷ் தான் நலமாக உள்ளதாகவும் தற்போது தேர்வுகள் நடைபெற்று வருவதாகவும், வருகின்ற டிசம்பர் மாதம் 20 ஆம் தேதி ஒருவார விடுமுறைக்காக வீடு திரும்புவதாகவும் கூறியுள்ளார்.

**உஜ்ஜயின்**

உஜ்ஜயின் செமினரியில் பயின்றுவரும் அருட்சகோதரர்கள் தங்கள் ஒருவார விடுமுறை முடிந்து அடுத்த கட்ட கல்வி தொடங்குவதற்காக தயாராக உள்ளனர். அதைப்போன்று டிசம்பர் 20 ஆம் தேதி அருட்சகோதரர்கள் கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடுவதற்காக வெவ்வேறு பங்குகளுக்கு அனுப்பப்பட உள்ளனர்.

**ஆயரின் சந்திப்பு**

வெவ்வேறு இடங்களில் பயின்றுவரும் அருட்சகோதரர்கள் குறிப்பாக உஜ்ஜயின், சாத்னா ஆகிய இடங்களில் பயின்று வரும் அருட்சகோதரர்களை மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் சந்தித்து நலம் விசாரித்தார். இதனால் அனைவரும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

**விடுமுறை**

கேரளாவில் பல்வேறு இடங்களில் பயின்று வரும் அருட்சகோதரர்கள் கிறிஸ்மஸ் விடுமுறைக்காக டிசம்பர் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் வீடு திரும்புவார்கள்.

**களப்பணி**

பல பங்குகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றி வரும் அருட்சகோதரர்கள் அனைவரும் நவம்பர் மாதம் 14 ஆம் தேதி ஒருநாள் தியானத்திற்காக முக்கூட்டுக்கல் இளம்குருமடத்தில் ஒன்று கூடினர். தியானமானது அருட்தந்தை டோஜி பறம்பில் பறம்பில் அவர்களால் வழிநடத்தப்பட்டது.

**குந்நோத்**

அருட்சகோதரர்களின் தலைவன் சகோ. றோபின் அருட்சகோதரர்களின் தேர்வுகள் அனைத்தும் நல்முறையில் நடைபெற வாழ்த்து தெரிவித்ததோடு இணைந்து தன்னை நமது ஜெபங்களில் நினைவு கூற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அருட்சகோதரர் றோபின்
தலைவர்

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

**பெண்களுக்கு எதிரான வன் முறைகளும் சட்ட உரிமைகளும்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் நடத்தப்படும் "குடும்பம் ஒன்றை காப்போம்" திட்டத்தின் வட்டார விழிப்புணர்வு முகாம் கல்லுவிளை KKSSS அரங்கத்தில் வைத்து அக்டோபர் 30 தேதி நடைபெற்றது.

**வன்முறைகளும் வன்கொடுமை களும்**

KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை வினு ஜோசப் அவர்கள் தலைமையுரை யாற்றும்போது ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை என்று பாரதி முழங்கினான். ஆனால் பசி, பட்டினி, சாவு தற்கொலை விபத்து இப்படி பலியானவர்கள் 73 சதவீதத்திற்கு மேல் இருப்பது பெண்கள் எண்ணிக்கைதான் அதற்கு உறுதுணையும் வழிகாட்டுதலும் தேவை என்பதை KKSSS நிறுவனம் உணர்ந்துள்ளது இந்த கருத்தரங்கு உங்களுக்கு உறுதுணையாகவும், பேருதவி யாகவும் இருக்கும் என நம்புகிறேன் என கூறினார்.

**வாழதுடிக்கும் பெண்ணினம்**

இதில் சிறப்பு விருந்தினராக குடும்பம் ஒன்றை காப்போம் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு.விஜயராஜன் அவர்கள் பேசும் போது பெண் பலவீனமானவள் என்றால் ஆணும் பலவீனமானவன் தான். பெண் தவறு செய்கிறாள் என்றால் ஆணும் தவறுகளுக்கு அப்பாற்பட்டவன் அல்ல. எனவே பலகீனமானப் பெண்ணை பாதுகாப்பவன் ஆண் என்பதும், தவறுகள் செய்யும் பெண்ணை அடித்து திருத்துபவன் ஆண்



என்பதுமான நம்பிக்கைகள் காலம் காலமாக நம் சிந்தனைகளில் திணிக்கப்பட்டிருப்பது, காம பொருளாய், அடிமைப்படவும், கடத்தப் படவும், சூதாட்ட காய்களாக பார்க்கப் படுகிறது. சமுதாயச் சட்டங்களும் நம்பிக்கைகளும் பெண்களை பலவீனமாகவே மதிப்பிட்டு வருகிறது. இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் பிரிவு14 படி சட்டத்தின் முன் அனைவரும் சமம். பிரிவு 14 ன் மூலம் தாழ்த்தப்பட்டோருக்கும் பெண்களுக்குமான மனித உரிமையை வழங்கியது. நாம்

பெற்ற இப்பயிற்சிக்கு பிறகு நம்மைப் பற்றியும் பெண்கள் நலனிலும் விழிப்புணர்வு பெறுவோம் எனவும் கூறினார். இந்நிகழ்வில் களப்பணியாளர்கள் திருமதி லிசி மற்றும் திருமதி சரோஜம், உட்பட 182 பயனாளிகள் கலந்து கொண்டனர்.

**வர்ணம் 2018**

குழந்தைகளின் திறமையை வெளிக்கொணர குழந்தைகள் தினத்தையொட்டி கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தால் மாவட்ட அளவிலான ஓவிய போட்டி



மற்றும் சுவரொட்டி வடிவமைத்தல் போட்டி நவம்பர் மாதம் 13 ம் தேதியன்று கல்லுவிளை ஆசிர் அரங்கத்தில் வைத்து "வர்ணம் 2018" நடைபெற்றது.

**சுவரொட்டி வடிவமைத்தல்**

KKSSS-ன் இயக்குநர் தந்தை சஜி எலம்பசேரில் அவர்கள் குத்து விளக்கேற்றி துவங்கி வைத்தார். இதில் சிறப்பு விருந்தினராக புனித அல்போன்சா கல்லூரி தமிழ்துறை தலைவர் முனைவர் சீமா அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இதில் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து 35 பள்ளிகளிலிருந்து 562 மாணவர்கள் இப்போட்டியில் கலந்துக் கொண்டனர். IV முதல் V வகுப்பு வரை 'குழந்தைகள் தினம்' என்ற தலைப்பில் ஓவியம் வரைதல் போட்டியில் அல்போன்சா மெட்ரிக் மேல்நிலை பள்ளி நாகர்கோவில் மாணவர் முதல் இடத்தையும் IV முதல் X வரை "அன்போடு எம்மை பாதுகாத்தல்" என்ற தலைப்பில் சுவெரொட்டி வடிவமைத்தல் போட்டி நடைபெற்றது. முதல் மூன்று இடங்கள் பிடித்த மாணவர்களுக்கு பரிசுத் தொகையும் கோப்பையும் வழங்கப்பட்டது மற்றும் சிறப்பாக வரைந்த மாணவர்கள் பள்ளி வாரியாக கௌரவிக்கப்பட்டனர்.

**எல்லாம் நம் கையில்**

நேர்மறை எண்ணங்கள் அமைப்பின் சார்பில் திருமதி தீபா அழகேஸ்வரி "குழந்தைகளோடு ஒரு மணிநேரம்" என்ற குழந்தைகள் தின நிகழ்வு நடைபெற்றது. இதில் பேசும் போது மாணவர்கள் பலர் பிறர் எழுதிக்கொடுத்ததை மனபாடம் செய்து ஒப்புவிக்கின்றார்களே யொழிய தன் திறமையை வளர்த்துக் கொள்ள முயற்சிப்பதில்லை. தன் அறிவைக் கொண்டு தானே சிந்தித்து இயல்பான நடையில் எளிமையாக பேச வேண்டும்

எல்லாம் நம் கையில் என்ற நம்பிக்கை இருந்துவிட்டால் எல்லாம் நிறைவேறும் என கூறினார்.

விருது வழங்குதல்

KKSSS-ன் இயக்குநர் தந்தை சஜி எல்ம்பசேரில், அவர்கள் தலைமையில் விருது வழங்குதல் நிகழ்வு நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக நாகர்கோவில் அல்போன்சா மெட்ரிக் மேல்நிலை பள்ளி தாளாளர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில் அவர்கள் கலந்து கொண்டு குழந்தைகளை பாராட்டி பரிசுகளை வழங்கினார். இதில் KKSSS துணை இயக்குநர் அருட்தந்தை வினு ஜோசப் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் ஏன ஏராளமானோர் கலந்து கொண்டனர். திரு. விஜயராஜன் அவர்கள் நன்றி கூறினார். இந்நிகழ்சியை அருட் சகோதரி றீஜா அவர்கள் ஒருங்கிணைத்து நடத்த கன்னியாகுமரி சமூக



சேவை சங்கத்தினர் இணைந்து செயல்படுத்தினர்.

நல்வாழ்வு முகாம் பளுகல்

மக்களின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு 'நலமும் நல்வாழ்வும்' திட்டத்தின் வழியாக கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் பல்வேறு மருத்துவ முகாம் நடத்த படுகின்றன. இதில் நெய்யூர் C.S.I மிஷன் மருத்துவமனையோடு இணைந்து 09.11.2018 அன்று பளுகல் புனித தோமையார் ஆலயத்தில் இலவச பொது மற்றும் கண் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. நிகழ்ச்சி துணை இயக்குநர் அருட்தந்தை வினு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக பளுகல் புனித தோமையார் ஆலய பங்குதந்தை ஜேக்கப் ஐயமாத்ரா அவர்கள் கலந்து கொண்டார். நெய்யூர் C.S.I மிஷன் மருத்துவமனை மருத்துவர்கள் Dr. சிஜின் மற்றும் Dr. தேவ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். பின்பு பொது நோய் அறிகுறிகள் இருப்பவர்களுக்கு மருந்தும் ஆலோசனையும், கண் பரிசோதனை செய்தவர்களுக்கு இலவச மருந்தும் ஆலோசனையும் வழங்கினர். 2 மருத்துவர் 2 மருந்தாளுநர்கள் மற்றும் 10 செவிலியர்கள் மருத்துவக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். இதில் C.S.I மிஷன் மருத்துவமனை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு. ஜேக்கப் மற்றும் செவிலியர்கள் KKSSSன் களஒருங்கிணைப்பாளர் செல்வன் அஜின் மற்றும் களபணியாளர்

திருமதி கொச்சு திரேசியாள். குழு உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என சுமார் 212 பேர் கலந்து கொண்டனர்.

**தக்கலை நிதி லிமிடெட் மந்திரிப்பு**

கன்னியா குமரி சமூக சேவை சங்கத்தின் சுய உதவி குழுக்களின் வருடாந்தர பொறுப்பாளர் கூட்டம் மற்றும் தக்கலை நிதி லிமிட் அர்ச்சிப்பு நவம்பர் 20 ஆம் தேதியன்று கல்லுவிளையில் நடைபெற்றது.

**வருடாந்தர பெறுப்பாளர் கூட்டம்**

சுய உதவி குழுக்களின் வருடந்தர பெறுப்பாளர் கூட்டம் கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் 2 மணியளவில் திருமதி ஷீபா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் குழுக்களின் செயல்பாடுகள் பற்றியும் மையம் சார்ந்து குழுக்களின் பலம் பலவீனம் வாய்ப்புகள் அச்சுறுத்தல்கள் என்ற தலைப்பில் விவாதிக்கப்பட்டது. சிறப்பான கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது KKSSS ன் விதிமுறைகளின் படி தான் குழுக்கள் செயல் பட வேண்டும் எனவும் கூறினார். சிறப்பு விருந்தினராக தக்கலை நிதி லிமிடெட் மேலாளர் திரு. ஜார்ஜ் பெர்னான்டஸ் அவர்கள் தக்கலை நிதி லிமிட்டின் செயல்பாடுகள் மற்றும் கடனுதவி திட்டங்கள் பற்றியும் எடுத்து கூறினார். அதனை தொடர்ந்து தக்கலை நிதி லிமிடெட் திறப்பு விழா நடைபெற்றது.

**தக்கலை நிதி லிமிட்**

தக்கலை நிதி லிமிடெட் எனும் வங்கி சேவையை நவம்பர் 20 அன்று தக்கலை மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் மந்திரித்து தொடங்கி வைத்து தலைமையுரையாற்றினார். இதில் குருகுல முதல்வர் பேருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் மறைமாவட்ட அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஆலோசனை குழு உறுப்பினர்கள் அலுவலக பணியாளர்கள், பொதுமக்கள்,



களப்பணியாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை சஜி எல்ம்பசேரில்
இயக்குநர்

---

**மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழா**

2018 ஆம் ஆண்டைய மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழா நவம்பர் 30 அன்று தொடங்கி கல்லுவிளை சீனாய் தியான மையத்தில் நடைபெற்று வருகிறது. டிசம்பர் 2 ஞாயிறு அன்று நிறைவு பெறும்.

# மறைமாவட்ட கல்வி நிறுவனங்கள்

**கணித ஆசிரியர்களுக்கான நேர்முகத் தேர்வு**

தக்கலை மறைமாவட்டத்திற்கு உட்பட்ட கணித ஆசிரியர்களுக்கான Rank List தயார் செய்வதற்கான நேர்முகத் தேர்வு 27-11-2018 அன்று தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. அதற்கு முன்னேற்பாடாக பதிவு செய்த அனைத்து பட்டதாரிகளுக்குமான நேர்முகத் தேர்வு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டது. மேலும் தொலைபேசிவழியாகவும் தகவல் கொடுக்கப்பட்டது. அழைப்பு விடுக்கப்பட்ட 15 பட்டதாரிகளில் 12 பட்டதாரிகள் தேர்வில் கலந்து கொண்டனர். நேர்முகத் தேர்வானது எழுத்துத்தேர்வு, வகுப்பு எடுத்தல், சான்றிதழ் சரிபார்த்தல் என மூன்று பிரிவுகளாக நடைபெற்றது. நேர்முகத் தேர்வினை வழிநடத்துவதற்காக Sr.Claret அவர்கள் நியமிக்கப்பட்டார். மேலும் Dr.C.Jeyasekaran (PKC College, Nagercoil), Leela Bai (St Joseph's High School, Pilankalai) and Muttaiyan ஆகியோர் கொண்ட குழுவினை கொண்டு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. நேர்முகத் தேர்வானது காலை 10 மணி அளவில் ஆரம்பமானது. நிகழ்வின் தொடக்கமாக பட்டதாரிகளின் வருகையை உறுதிசெய்ய அவர்களிடமிருந்து கையொப்பம் பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து எழுத்துத் தேர்வு நடைபெற்றது. பின்னர் நேர்முகத்தேர்வின் அடுத்த பகுதியான சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் வகுப்பு எடுத்தல் நடைபெற்று நேர்முகத் தேர்வானது பிற்பகல் 2.30 மணி அளவில் நிறைவு பெற்றது.

**1. கார்மல் மாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி: கோவளம் கன்னியாகுமரி**

14-11-2018 அன்று காலை 10 மணியளவில் மழலையர் பள்ளி மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தும் வகையில் "kids Day" கொண்டாட்டம் ஆரம்பமானது. சிறப்பு விருந்தினராக அருட்தந்தை செல்வமணி காசா கிளாரட் அவர்கள் வருகை தந்து சிறப்புரையாற்றினார். பள்ளியின் தாளாளர், தலைமை ஆசிரியர் பெற்றோர் கலந்து கொண்டனர். 12மணியளவில் விழா இனிதே நிறைவு அடைந்தது. பின்னர் மதியம் 01.15 மணியளவில் குழந்தைகளை மகிழ்விக்கும்

விதமாக குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. ஆசிரியர்கள் குழந்தைகளை வாழ்த்தும் விதமாக பாடல் பாடினர். பள்ளியில் இதுவரை நடைபெற்ற போட்டிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்க சுமார் 3மணியளவில் விழா இனிதே நிறைவுற்றது.

2.மவுண்ட் கார்மல் மெட்ரிக் பள்ளி

குழந்தைகள் தினவிழா மவுண்ட் கார்மல் மெட்ரிக் பள்ளியில் 14.11.2018 அன்று கொண்டாடப்பட்டது. குழந்தைகள் தின விழாவையொட்டி 12.11.2018 அன்று பேச்சுப்போட்டி மற்றும் மாறுவேடபோட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கிசிறப்பிக்கப்பட்டது. பின் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

3.திருக்குடும்ப மேல்நிலைப் பள்ளி முக்கூட்டுக்கல்

அக்டோபர் 3ம் தேதி காலாண்டு தேர்வு முடிவுற்று விடுமுறைக்கு பின் வகுப்புகள் ஆரம்பமானது. செப்டம்பர் 21 முன் தீர்மானித்தபடியே சுற்றுலா நன்கு நடைபெற்றது. அதில் பெருபான்மையான ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள். ஒவ்வொரு மாதமும் திங்கள் முதல் வெள்ளி வரை தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் மன்றங்கள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நவம்பர் 8 ஆம் தேதி ஆண்டுவிழா ஜூபிலி பொன்விழா நடத்துவதற்கு முன்னேற்பாடாக விளையாட்டு மற்றும் கலைப்போட்டிகள் நடத்தப்பட்டது. விளையாட்டு போட்டியை P.T.A தலைவர் திரு. புஷ்பராஜ் அவர்கள் துவக்கி வைத்தார்கள். மாநில அளவில் விளையாட நம் பள்ளி மாணவன் jino s johnKrishnaja தேர்வு செய்யப்பட்டார். பிரச்சினையோடு இருந்த மாணவர்களுக்கு Sr. Josia அவர்களால் ஆற்றுபடுத்துதல் வழங்கப்பட்டது.

பொன்விழா நிறைவு அறிக்கை

முக்கூட்டுக்கல் திருகுடும்ப மேல்நிலைப்பள்ளி 50ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு நிகழ்ச்சியானது 08-11-2018 அன்று திருக்குடும்ப மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வைத்து நடைபெற்றது. விழாவை தொடக்கப்பள்ளியும் மேல்நிலைப் பள்ளியும் இணைந்து நடத்தியது. காலை 9.30 மணியளவில் நிர்வாகி அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் கொடியேற்ற விழாவிற்கு தலைமை ஏற்க வருகை தந்திருந்த தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் மற்றும் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த முன்னாள் தாளாளர்கள், நிர்வாகிகள், அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், முன்னாள்

தலைமை ஆசிரியர்கள் அனைவரையும் பள்ளி வாசலில் இருந்து பூரண கும்ப வரவேற்புடன் அழைத்து வரப்பட்டு மேடையில் அமர்த்தப்பட்டனர். மாணவிகள் இறைவணக்கம் பாட, திரு. ஜஸ்டஸ் ஆசிரியர் அனைவரையும் வரவேற்றார். பொன்னொளி தீபம்



ஏற்றப்பட்டது. தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் திரு. மாத்யூ வர்கீஸ் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியை திருமதி சசிகலா விஜயகுமாரி ஆகியோர் ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தனர். ஆயர் அவர்கள் பொன்விழா நிறைவு உரை நிகழ்த்தினர். முன்னாள் தாளாளர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் நிர்வாகி அருட்தந்தை ஜோஸ் அருவியில், முன்னாள் தலைமையாசிரியை Sr. மேரி C.V முன்னாள் ஆசிரியர் திரு. ஜெஸ்டின் பாபு முன்னாள் மாணவர் பிரதிநிதி திரு. செல்வராஜ், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் திரு. புஷ்பராஜ், திரு. ஜெகதீஷன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். மேலும் குழித்துறை ஒன்றிய கல்வி அலுவலர் திருமதி . ஷீலா ரமணி MA,B.Ed அவர்களும் வருகை தந்து வாழ்த்துரை வழங்கினார். நிகழ்வின் இடையிடையே மாணவர்களின் பலவிதமான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியில் தொடக்கப்பள்ளி ஆசிரியர் திரு. இராஜேந்திரன் அவர்கள் நன்றியுரை வழங்க தேசிய கீதத்துடன் விழாவானது இனிதே முடிவடைந்தது. பொன்விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

**4.புனித ஜேம்ஸ் உயர்நிலைப் பள்ளி வலியவிளை**

3-11-2018 அன்று நாகர்கோவிலில் அண்ணா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற Take wondo போட்டியில் 25 மாணவர்கள் கலந்து கொண்டனர். அதில் சில மாணவர்கள் பரிசு பெற்றனர். TCSL சார்பில் ஜெபமாலை 10 நாட்கள் நடைபெற்றது. 2-11-2018 அன்று முதல் வெள்ளி அனைத்து மாணவர்களும் அனைத்து ஆசிரியர்களும் இணைந்து அருட்தந்தை பிறின்ஸ் தலைமையில் திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டது. 9-11-2018 அன்று ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. அதில் பள்ளி ஆண்டு விழா பற்றி விவாதிக்கப்பட்டது. 29-11-2018 அன்று ஆண்டு

விழா கொண்டாடுவதாக தீர்மானிக்கப்பட்டது. 10-11-2018 அன்று பெற்றோர் ஆசிரியர் கழக கூட்டம் நடைபெற்றது. அதில் மாணவர்களின் கற்றல் தன்மை பற்றி விவாதிக்கப்பட்டது. 13-11-2018அன்று அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.அதில் முதல் மற்றும் இரண்டாம் பரிசு தேர்வு செய்யப்பட்டது.

**5.திருக்குடும்ப உயர்நிலைப் பள்ளி ஆறுகாணி**

2.11.2018 முதல் 3-11-2018 முடிய 2 நாட்கள் திற்பரப்பு தேவசம் போர்டு மேல்நிலைபள்ளியில் நடைபெற்ற சாரண சாரணியருக்கான ராஷ்ட்ரபதி விருது பயிற்சிக்கு எம் பள்ளியிலிருந்து 4 மாணவர்களும் 10-11-2018 அன்று விளவங்கோடு மேல்நிலைப்பள்ளியில் பயிற்சிக்கு 4 மாணவர்களும் கலந்துக் கொண்டார்கள்.

**NTSE சிறப்பு தேர்வு**

4-11-2018 மார்த்தாண்டம் எல்.எம்.எஸ் மேல்நிலைப்பள்ளியில் NTSE சிறப்பு தேர்வு எழுத எம் பள்ளியிலிருந்து 10 ம் வகுப்பு மாணவ மாணவிகள் கலந்துக்கொண்டனர்.

**விளையாட்டு போட்டிகள்**

பள்ளி ஆண்டு விழாவை முன்னிட்டு இக்கல்வியாண்டின் விளையாட்டு போட்டிகள் 12.11.2018 மற்றும் 13-11-2018 வரை தலைமை ஆசிரியை தலைமையில் நடத்தப்பட்டது.

இப்போட்டியானது கொடியேற்றத்துடன் தொடங்கியது. உதவி தலைமை ஆசிரியர் திரு. கிறிஸ்துதாஸ் ஆசிரியர் துவக்க உரை நிகழ்த்தினார்கள். பின் தலைமை ஆசிரியை Sr. பிரிதா ஜோஸ் அவர்களால் கொடி அசைத்து ஒலிம்பிக் தீபம் ஏற்றி போட்டியினை துவங்கி வைத்தார்கள். உடற்கல்வி ஆசிரியர் மற்றும் அனைத்து ஆசிரியர்கள் ஒத்துழைப்புடன் 3 குழுக்களாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றன. 12-11-2018 அன்று கைபந்து கபடி போன்ற குழுப்போட்டிகளும் 13-11-2018 அன்று தடகள போட்டிகளும் நடைபெற்றது.

**குழந்தைகள் தினவிழா**

14.11.2018 அன்று பள்ளி தாளாளர் பேரருட்தந்தை போபின் ஆலப்புரக்கல் அவர்கள் தலைமையில் குழந்தைகள் தினவிழா கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் தலைமை ஆசிரியர் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொண் டார்கள். கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆசிரியை திருமதி வினிதா ஜார்ஜ் அவர்கள் மாணவர்களுக்கு குழந்தைகள் தின வாழ்த்துக்களை வழங்கினார்கள். தந்தை அவர்கள் தலைவர் உரையில் ஜவகர்லால் நேருவின் வாழ்க்கை மற்றும் குழந்தைகள் தின

விழாவின் முக்கியத்துவம் குறித்து பேசினார்கள். தலைமையாசிரியர் சிறப்பு உரையில் மாணவர்கள் நேருவின் புத்திசாலி தன்மையையும் பண்பையும் பெற்று வாழ வேண்டும் என்று கூறினார்கள். இறுதியில் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இவ்விழாவானது நாட்டுபண்ணுடன் இனிதே நிறைவு பெற்றது.

6. மார் மாத்யூ காவுக்காட்டு நினைவு உயர்நிலைப்பள்ளி வாறுதட்டு

வாறுதட்டு மார் மாத்யூ காவுக்காட்டு நினைவு உயர்நிலைப்பள்ளி யில் குழந்தைகள் தினவிழா 14-11-2018 அன்று கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் பள்ளி மாணவர்களுக்கான கலைப்போட்டிகள் நடைபெற்றது. பள்ளியின் இக்கல்வியாண்டு விளையாட்டு விழா மற்றும் ஆண்டுவிழா 22-11-2018 அன்று நடைபெற்றது.

24-11-2018 சனிக்கிழமை நாகர்கோவில் புனித சவேரியார் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெற்ற நான்கு மறைமாவட்டங்கள் இணைந்து நடத்திய புத்தக கண்காட்சியில் 24 மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்பள்ளியில் பயிலும் ஏழை மாணவி ஒருவரின் தாயாருக்கு அறுவை சிகிட்சை செய்ய உதவி செய்யப்பட்டது.

அருட்தந்தை ஜோண்சிலால்
தாளாளர்

---

## 22வது மறைமாவட்ட தினம்

மறைமாவட்டம் உருவான நாளான நவம்பர் 11ஆம் நாளை மறைமாவட்டம் மறைமாவட்ட தினமாக கொண்டாடி வருகிறது. அதன்படி 22வது மறைமாவட்ட தினம் நவம்பர் 11 அன்று படந்தாலுமூடு திருஇருதய ஆலயத்தில் மாலை 3.30 மணிக்கு ஆயர் அவர்களின் தலைமையில் திருப்பலியோடு ஆரம்பமானது. தொடர்ந்து ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் வரவேற்புரை வழங்க, ஆவணக்காப்பாளர்பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் மறைமாவட்ட செயல்பாடுகளின் விரிவான அறிக்கையை வழங்கினார். அருட்சகோதரிகள் மேரி வினயா சி.எம்.சி, எல்சீனா சி.எம்.சி, தீபா எ.எஸ்.எம்.ஐ, திருமதி அமலோற்பவம் செங்கோட்டை மற்றும் மல்லிகா கிறிஸ்துராஜபுரம் ஆகியோருக்கு சேவைச்செம்மல் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். பல்வேறு பங்குகளிலிருந்து மேடை கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

# Home away Home

நல்லுறவுடன் வாழ்ந்தால் நன்மையே வாழ்வில் உயர்வு காண்பீர் திண்ணமே என்பதற்கிணங்க, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்து உயர்தரக் கல்விக்காகவும், தொழிலுக்காகவும், வேலை வசதிகளுக்காகவும் கன்னியாகுமரி பகுதியில் வாழும் அனைவரையும் ஒருங்கிணைத்து நாம் அனைவரும் ஒரு குடும்பம் என்னும் உள்ளுணர்வினை ஊக்குவிக்கும் விதமாக Home away Home என்னும் நிகழ்வு CMC துறவற சபை அருட்சகோதரிகளின் ஒன்றுப்பட்ட முயற்சியின் பயனாக அக்டோபர் மாதம் 28 ஆம் தேதி மாலை 4.30 மணியளவில் கன்னியாகுமரி கார்மல் மாதா மெட்ரிகுலேசன் கல்வி நிலையத்தில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்வில் அருட்சகோதரி அல்போன்ஸ் CMC அவர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்றார். இக்கூட்டத்தில் CMC துறவற சபையின் தக்கலை சாவரா வைஸ் புறவென்சின் தலைமை அதிகாரி அருட்சகோதரி விஜி அவர்கள் தலைமை வகிக்க



அருட்தந்தை பிறின்ஸிஸ் மற்றும் அருட்தந்தை யேசு பாபு CFIC ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டார்கள். வாழ்க்கை என்பது ஒரு போர்களம் அதில் நாம் தைரியத்துடன் போர் செய்து வெற்றியடைய வேண்டும் என்னும் உயரிய கருத்துக்களுடன் அருட்தந்தை யேசு பாபு சிறந்ததொரு சிறப்புரையாற்றினார். அத்துடன் அனைவரும் தங்கள் கலை திறமைகளை வெளிகொணரும் வண்ணமாக வாய்ப்புகள் அளிக்கப்பட்டு ஆடல், பாடல் போன்ற நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. அனைவருக்கும் வயது வரம்பின்றி ஆக்கமும் ஊக்கமும் அளிக்குமாறு பல விளையாட்டு போட்டிகளும் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியில் நன்றியுரையுடன் 7.30 மணியளவில் நிகழ்வுகள் நிறைவுற்றன. 150 க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டார்கள். கேரளா மற்றும் வட இந்தியர்களும் தான் அதிகமாக கலந்து கொண்டார்கள். இக்கூடுகையினால் அவர் தம் வாழ்வில் புத்துணர்வினையும் புது எழுச்சியையும் ஏற்படுத்தியதோடு நாம் யாரும் தனிமையில் வாழ்வதில்லை மாறாக நமக்காக நல்லுறவுகள் உலகமெங்கும் உண்டு என்றும், நாம் அனைவரும்

ஒரே குடும்பம் என்னும் உன்னதமான உணர்வினை அவர்களுள் வேரூன்ற செய்ததாகவும் எடுத்துரைத்தார். அனைவரின் உள்ளங்கள் புது உறவுகளால் பூரிப்படைந்து வலுப்பெற்றிட இனிதே இன்முகத்தோடு தம் இல்லம் நோக்கி சென்றனர்.

அருட்சகோதரி விஜி|தலைமை அதிகாரி

**மறைமாவட்ட அருட்தந்தையாக மேத்யூ குழிஞ்ஞாலில்**

மறைமாவட்ட திருத்தொண்டுப் பணியில் தலைசிறந்து விளங்கிய அருட்தந்தை மேத்யூ குழிஞ் ஞாலில் அவர்கள் தற்போது மறைமாவட்ட அருட்தந்தையாக இணைக்கப்பட்டுள்ளார். 28 டிசம்பர் 1983 அன்று பாலா மறைமாவட்ட அருட்தந்தையாக அருட்பொழிவு பெற்ற இவர் 1986 ஜனவரி 25 அன்று குமரி திருத்தொண்டுதளத்தில் மறைபணியாற்ற வருகை தந்து குமரி மற்றும் செங்கோட்டை பகுதிகளில் அரும்பணியாற்றினார். தொடர்ந்து சில ஆண்டுகள் தவ மற்றும் தியான முயற்சியில் ஈடுபட்டு வந்தார். தற்போது அருட்தந்தை அவர்கள் திருஅவை விதிமுறைப்படி நவம்பர் 12 அன்று பாலா மறைமாவட்ட ஆயர் மார் ஜோசப் கல்லறங்காட் அவர்களிடமிருந்து விடுவிப்பு ஒப்புகை (CCEO c. 359, 365 § 2) பெற்று அம்மறைமாவட்டத்திலிருந்து விடுவித்து தக்கலை மறைமாவட்டத்தில் இணைந்துக் கொண்டார். தக்கலை மறைமாவட்டத்தில் நிரந்தரமாக பணியாற்ற அனுமதி அளித்த பாலா மறைமாவட்ட ஆயர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு அருட்தந்தை அவர்களை அன்புடன் வரவேற்கிறது மறைமாவட்டம்.

| BIRTHDAYS - DECEMBER | |
|---|---|
| Fr. Alex Puthettu | 17 |
| Fr. Joseph Anithottam CMI | 18 |
| Fr. Antony Jose | 18 |
| Fr. Matheus Robert | 26 |
| Fr. Rony Peedikayil MCBS | 26 |

| FEASTDAYS - DECEMBER | |
|---|---|
| Fr. Joshy Kulathumkal | 27 |
| Fr. John (Subin) Puthenpurackal | 27 |
| Fr. John Joseph | 27 |
| Fr. John Thekkel | 27 |

# மறைவட்ட செய்திகள்




## சூசைபுரம் மறைவட்டம்

**மாங்கரை**

10-11-2018 அன்று மறைகல்வி ஆசிரியர்களுக்கு நற்கருணை ஆராதனை நடைபெற்றது. 16-11-2018 அன்று நற்கருணை ஆராதனையும், ஒப்புரவு திருச்சடங்கும் நடைபெற்றது. 18-11-2018 அன்றுபங்குப் பேரவை கூட்டம் நடைபெற்றது. 25-11-2018 அன்று நடைபெற்ற மறைகல்வி பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் அருட்தந்தை ஜிஜு தெக்கெதலக்கல் அவர்கள் வகுப்பு நடத்தினார்.

**பாலப்பள்ளம்**

4-11-2018 அன்று காலை 9 மணிக்கு பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது. அதில் திருவிழா பற்றி ஆலோசிக்கப்பட்டு பொறுப்பாளர்கள் நியமிக்கப் பட்டன. உறவியங்களின் அடிப்படையில் திருப்பலிக்கான காணிக்கை பவனி நடத்த வேண்டும் எனவும் 18.11.2018 அன்று அன்பின் விருந்து நடைபெறும் எனவும் 25. 11.2018 அன்று முதல் திருவிருந்து நடைபெறும் எனவும் அறிவிக்கப்ப ட்டது.

**திருவிழா**

16.11.2018 அன்று அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் அவர்கள் கொடியேற்ற 10 நாட்கள் திருவிழா ஆரம்பமானது. அன்றைய தினம் திருப்பலியினைத் தொடர்ந்து பக்த இயக்கங்கள் மற்றும் மறைகல்வி ஆண்டுவிழா நடைபெற்றது. 17.11.2018 அன்று திருப்பலியினைத் தொடர்ந்து மறைமாவட்ட இளையோர்கள் இணைந்து வழங்கிய "இளையோர் விருந்து" பல்சுவை நிகழ்ச்சி நடைபெற்றது. 18.11.2018 அன்று காலை அனைத்து உறவியங்கள் சார்பாகவும் கிறிஸ்து அரசர் கிரீட பவனி அனைத்து விடுகள் தோறும் சென்று மதியம் 2.30 மணிக்கு ஆலயம் வந்தடைந்தது. தொடர்ந்து இராசை திருப்பலியும் அதை தொடர்ந்து அன்பின் விருந்தும் நடைபெற்றது. 19, 20, 21, 22 ஆகிய தியதிகளில் மாலை நற்செய்திக் கூட்டம் சென்னையைச் சார்ந்த நற்செய்தி குழுவினர் சகோ டேவிட் அவர்கள் நடத்தினர். 23-11-2018 அன்று திருப்பலியினை தொடர்ந்து முன்னாள் பங்கு தந்தை ஜியோ குழிக்குந்நேல் அவர்களுக்கு குருத்துவ பொன்விழா வாழ்த்துக்களும் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. தொடர்ந்து உறவியங்களின் ஆண்டுவிழா நடைபெற்றது. 24-11-2018 அன்று குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களின் திருப்பலியும் தொடர்ந்து ஆடம்பர

தேர்ப் பவனியும் நடைபெற்றது. 25-11-2018 மேதகு ஆயர் மார் இராஜேந்திரன் அவர்கள் முதல் திருவிருந்து வழங்கினார். மாலையில் திருக்கொடியிறக்கமும் D4 Dance ம் நடைபெற திருவிழா இனிதே நிறைவடைந்தது.

## நித்திரவிளை மறைவட்டம்

### புனித ஜார்ஜியார் திருத்தலம்

முஞ்சிறையில் 15-11-2018 அன்று மாலை 5.30 மணிக்கு ஜெபமாலையும் 6 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நற்செய்தி கூட்டமும் நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. 29-11-2018 அன்று மாலை 5.30 மணிக்கு ஜெபமாலையும் திருப்பலியும் நடைபெற்றது. சகோ. இசையாஸ் அவர்கள் இறைவார்த்தை பகிர்ந்தார்.

### கிறிஸ்துராஜபுரம்

கிறிஸ்து அரசர் ஆலய திருவிழா 19 முதல் 25 முடிய 7 நாட்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் பங்குதந்தை அவர்கள் கொடியேற்ற 3 நாட்கள் நற்செய்திப் பெருவிழா நடைபெற்றது. 4 ம் நாள் ஜெபமாலையும் பவனியும் உறவியங்கள் பக்தஇயக்க ஆண்டுவிழா பொதுக்கூட்டமும் லத்தீன் ஆராதனை ஒழுங்குபடி திருப்பலியும் நடைபெற்றது. ஆறாம் நாள் காலை திருமுழுக்கு வழிபாடும் முதல் திருவிருந்து வழங்குதல் நிகழ்ச்சியும் மாலை ஆண்டுவிழா பொதுக்கூட்டமும் நடைபெற்றது. ஏழாம் நாள் மாலை இராசைத் திருப்பலியும், மாலையில் கிறிஸ்து அரசர்பவனி வருதலும் திருகொடி இறக்குதலும் தொடர்ந்து அன்பின் விருந்தும் நடைபெற்றன.

தகவல்: திருமதி செலின் மேரி|திருமதி ஸ்னேக லதா|திருமதி ஹேமா

## BISHOP'S ENGAGEMENTS DECEMBER 2018

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1-2 | | 09.00 am | Diocesan Bible Convention |
| 3 | Mon | 07.00 am<br>06.00 pm | Saveriarpuram: Feast Day Holy Qurbana<br>Nagercoil: UCC- CSI Home Church |
| 4-5 | Tue | 09.00 am | Curia Meeting |
| 6 | Thu | 10.00 am<br>11.00 am | Meeting With Christian Workers<br>Meeting With Mr. Subash |
| 7 | Fri | 03.00 pm | Ariyankavu: Holy Qurbana |
| 8 | Sat | 11.00 am<br>01.00 pm<br>03.00 pm | Padanthalumoodu: Convocation for Counselor<br>Office Blessing of Marian Senai<br>Kamaraj Nagar: Carols Singing Competition |

| | | | |
|---|---|---|---|
| 9 | Sun | 9\|12 pm<br>03.00 pm<br>04.00 pm | Meeting of Kaikars\| Tamil Nadu Regional Youth Meet<br>Soosaipuram: New Teachers Orientation Programme<br>Neyyoor: Regional Christmas Celebration |
| 10 | Mon | 12.00 pm | Nagercoil: Ecumenical Christmas Meeting |
| 11 | Tue | 07.00 am<br>09.30 am | Thuckalay: Holy Mass at CMC Regional House<br>Bishop's House: Curia Meeting |
| 12 | Wed | 09.00 am<br>03.00 pm | Thenkasi: Marriage Qurbana<br>Vailankarai: Visit of V-Star MD, Ms Sheela |
| 13\|14 | Fri | 10.00 am | Bishop's House\|Death Anniv of Fr. Thomas Thekkeyil |
| 15 | Sat | 10.00 am<br>02.00 pm<br>06.00 pm | Nagercoil: Ecumenical Christmas Gathering<br>Thuckalay: Christmas Gathering with Institutional Staff<br>Wedding Anniversary at Thirunelveli |
| 16 | Sun | 08.00 am | Madurai: Holy Qurbana\|Shenkottai: Pre-Christmas Gathering |
| 17 | Mon | 10.00 am | Mulagumoodu: Christmas Gathering at Nanjil Milk Plant |
| 18\|19 | Tue | 04.00 pm | Pre-Christmas Celebration of Priests\| Bishop's House |
| 20 | Thu | 12.00 pm<br>05.30 pm | Arumanai: Marriage & Inter Religious Meet<br>Thuckalay: Christmas Celebration with Neighborhood |
| 21 | Fri | 12.30 pm<br>04.00 pm | Christmas Gathering with Bishop's House Staff<br>Soosaipuram: Kids Day |
| 22 | Sat | 10.30 am | Christmas Gathering with CRI\| with Well-Wishers |
| | | 07.00 pm | Minor Seminary: Christmas Gathering |
| 23 | Sun | 10.00 am<br>01.00 pm<br>05.00pm<br>08.00 pm | Jubilee Meeting at CSI Church Pulippanam<br>Christmas Gathering with Major Seminarians<br>Marthandam: Church Blessing<br>Bishop's House Community Gathering |
| 24 | Mon | 10.30 am<br>11.00 pm | Thadikkarakonam: Church Alter Blessing / Mankarai:<br>Christmas Holy Qurbana |
| 25 | Tue | 05.30 pm | Kulashekaram :Regional UCC Christmas Gathering |
| 26 | Wed | 07.00 am | Munchirai: First Holy Communion >> Changanassery |
| 27 | Thu | 09.30 am<br>04.00 pm | Chethipuzha: Priestly Ordination of CMI Deacons<br>First Holy Communion and Family Gathering |
| 28 | Fri | 11.00 am | Mannanam: Feast Day Holy Qurbana |
| 29 | Sat | 02.30 pm<br>04.00 pm<br>09.00 pm | Changanassery: Xmas Gathering with Well-Wishers<br>Wedding Jubilee Holy Qurbana: Parents of Fr. Thomas<br>Thuckalay\| >>To Bangalore |
| 30 | Sun | 09.00am | Bangalore: Salesian Brothers Congress |
| 31 | Mon | 07.00 pm | Kunnuvilai: Holy Qurbana |

Fr. Shajan Nettapongu\|Bishop's Secretary




**Diocesan Day**




**Thuckalay Nidhi Limited**




**YouthFest 2K18 Winners, Vayalinkarai**



# YouthFest 2k18
# 06.11.2018



## Holy Family School Mukkuttukal-Golden Jubilee
## 08.11.2018

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570